19th September 1961]

The Moradhana Dam.

* **1632** *Q.*—SRI **V. K. KOTHANDARAMAN** : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

குடியாத்தம் தாலூகாவில் அடிக்கடி ஏற்படும் குடி தண்ணீர் பஞ்சத்தைப் போக்க டாம் (Dam) கட்டும் விஷயம் எந்த நிலையில் உள்ளது ?

THE HON. SRI **M. A. MANICKAVELU** : **It is presumed that the Member refers to the proposal relating to the construction of a dam at Moradhana Village in Gudiyattam taluk. If so, the matter is under correspondence with the Chief Engineer, Public Works Department (General).**

SRI **V. K. KOTHANDARAMAN.** : ஸார், இந்த தாலூகாவிலே விவசாயம் செய்வதற்கு டாம் கட்டுவதற்கு வசதி இருந்தாலும்கூட, பாலாறு பேசின் ரூலைக் காட்டி அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது. ஆனால் அதே சமயத்தில் குடி தண்ணீர் பிரச்னையைத் தீர்ப்பதற்கு, அத்திட்டம் பரிசீலனையில் இருக்கிறது, பரிசிலனையில் இருக்கிறது என்று சொல்லிக் கொண்டு வந்தால், குடி தண்ணீர் பஞ்சம் ஏற்படக்கூடிய நிலைமை ஏற்பட்டு விடுமாகையால், அதை உத்தேசித்தாவது உடனடியாக குடி தண்ணீர் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு, அதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்வதற்கு கனம் அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI **M. A. MANICKAVELU**: இந்த விஷயத்தைச் சரியாக கவனித்துதான் செய்யவேண்டும். சும்மா பணத்தை சூறையாட விட முடியாது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதாக இருந்தால், இரண்டு விதமாக தண்ணீரைக் கொண்டு வரமுடியும். ஒன்று, அணைக்கட்டி தண்ணீர் தேக்கலாம், அல்லது பம்பு செய்து தண்ணீரை டைவர்ட் செய்து கொண்டு வரலாம். அப்படி வருவதிலே தண்ணீர் எவாபரேட் ஆகிவிடுகிறது என்று சொல்லப்படுகிறது. இன்னொரு கஷ்டம் என்னவென்றால், சுற்று வட்டாரத்திலுள்ள வாட்டர் டேபிள் உயரவேண்டும். அது உயராது. காரணம், சுற்று வட்டாரத்தில் 4, 5 மைல்கள் வெறும் பாராங்கற்களாக இருக்கிறது. அதனால் தண்ணீர் ஏறாது. இந்த மாதிரியான சிக்கல்கள் இருக்கிறதினாலே, இதைப்பற்றி மேலும் பரிசிலனை செய்வதற்காக மேலே உள்ள உத்தியோகஸ்தர்களுக்கு அனுப்பி இருக்கிறோம். இதற்கு முன் அசிஸ்டெண்ட் என்ஜினியர் லெவலிலே பரிசீலனை செய்யப்பட்டது. இப்போது சீப் என்ஜினியர் அவர்களுக்கு அனுப்பி சரி பார்க்கும்படி எழுதப் பட்டு இருக்கிறது.

Sugar

* **1632-A** *Q.*—SRI **M. KALYANASUNDARAM** : **Will the** Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the total stock of sugar held by the factories as on 1st June 1961;

(b) the quota fixed for use in the State; and

(*c*) whether any representations have been made to **the Central Government for increasing the allotment of sugar for the State?**

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The figure showing the total stock of sugar held by factories as on 1st June **1961 is not readily available.** The total stock of sugar as on 30th June 1961 was 58,728 M. tonnes;

(*b*) The quota fixed for consumption in this State was 10,800 tons up to June 1961. It has been raised to 11,800 tons per mensem form July 1961; and

(*c*) Yes, the Government of India were asked to raise the monthly quota of sugar to this State by 1,000 tons **and this has been done from July, 1961.**

[19th September 1961

Sri N. K. PALANISAMI : May I know whether this Government has suggested to the Centre to relax the control imposed on sugar distribution?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : What this Government have suggested the Centre is that there could be a Zonal restriction so far as sugar movement is concerned.

Food stuffs

* 1632-B *Q.*—Sri V. K. KOTHANDARAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) புழு, பூச்சிகளாலும், எலிகளாலும் நாசப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள் நமது ராஜ்யத்தில் எவ்வளவு ?

(இ) அழுகியோ அல்லது கெட்டுப்போனவை எவ்வளவு ? 1957 முதல் 1959 வரை ?

(உ) அதற்காக சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

(எ) இல்லை என்றால் இனியாவது எடுக்க உத்தேசம் உண்டா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (அ) to (எ) A Statement [a] is placed on the table of the House.

Sri V. K. KOTHANDARAMAN : ஸார், நாகபுரியிலே பணியாற்றிய ஒரு பெரிய அமெரிக்க நிபுணர் டாக்டர் ஆர்தர் ஸ்டில் என்று சொல்லக் கூடியவர் சென்ற ஆண்டு அதாவது 60-வது ஆண்டு ரிப்போர்டிலே விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய காய்கறிகளில்கூட 33 சத விகிதம் முதல் 50 சத விகிதம் வரையிலும் பக்குவப்படுத்தி வைக்கக்கூடிய வழிமுறைகளை எடுத்துக் காட்டி இருக்கிறார். அதேபோல் உணவுத் தானியங்களையும்கூட போக்குவரத்து இல்லாத காரணத்தினால் அதையும் சேமித்து வைக்கக் கூடிய இடங்களில் சரியான அளவுக்கு பாதுகாப்பு இல்லாத காரணத்தினால், எலிகளும், மற்றும் பூச்சிப் புழுக்களும் தின்று உணவை நாசமாக்குகின்ற காரணத்தினாலே, அவைகளையும் பக்குவப்படுத்தி வைக்கக்கூடிய முறையிலே, அதாவது உணவு பற்றாக்குறை இருக்கக்கூடிய காலத்திலே . . .

DEPUTY SPEAKER : கேள்வியாகக் கேட்க வேண்டுமே தவிர, பிரசங்கம்போல் இருக்கக்கூடாது.

Sri V. K. KOTHANDARAMAN : பிரசங்கம் செய்யவில்லை. சீக்கிரத்தில் முடித்து விடுகிறேன். அதற்கெல்லாம் என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : நானும் சுருக்கமாகவே விடை சொல்லுகிறேன். ஆங்காங்கே இவ்விதக் கஷ்டங்கள் ஏற்படத்தான் செய்கிறது. ஆகவே அதற்காக தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதோடு எலிக்குக்கூட நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

Bird Sanctuary (Point Calimere)

* 1632-C *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to convert Point Calimere in Thanjavur District into a sanctuary for water fowls and to develop the Muthupet-Point Calimere-Vedaranyam into a National park-cum-Holiday resort under the Third Five-Year Plan; and

---

[a] Printed as Appendix VI on pages 230–231 infra.